# வேதாகம பெண்கள்

1

சகோ. பிரன்ஹாம்
அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)



# மரியாள்

இத்தூதனுடைய வாழ்த்துதல்,
அந்த சிறு கன்னிகையை
திகிலடையச் செய்தது, ஒரு ஒளி
அவன் மேல் தொங்கிக்
கொண்டிருந்தது





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: கிறிஸ்துவின் ஊழியம்,

**ஜுன் 7, 1953, கானர்ஸ்வில், இந்தியானா, அமெரிக்கா**

ஓ, நான் எண்ணிப்பார்க்கிறேன், பிறகு, நான் சகரியாவை எப்படியாகப் பார்க்கிறேன், அவன் அதை சந்தேகித்தான், ஆனால் எலிசபெத் கற்பவதியாகி சிறிது கழிந்து, அவள் ஆறு மாதங்கள் தன்னைத்தானே மறைத்துக் கொண்டாள், அவள் கற்பவதியாகியிருந்தாள், அவள் இந்தப் பிள்ளையைக் கொண்டு வந்தாள். (கற்பவதியாகி) 6 மாதங்கள் கழித்த பிறகு...

இப்பொழுது நம்முடைய பார்வையை வேறு ஏதோவொரு இடத்திற்குத் – நாசரேத்திற்குத் திருப்புவோம், நாசரேத் உலகத்திலேயே மிகவும் மோசமான பட்டணமாக இருந்தது, அது கானர்ஸ்வில், ஜெபர்ஸன்வில் அல்லது அவைகளில் எதைக் காட்டிலும் மோசமாக இருந்தது. ஓ, அது பயங்கரமானதாக இருந்தது.

**26.** இப்பொழுது கவனியுங்கள், நாம் இங்கே ஒரு விதமான சிறு நாடகத்தை கொடுப்போம்; அது திங்கள் கிழமையாக இருப்பதாக கற்பனை செய்து கொள்வோம். வழக்கமாக, அது ஸ்திரீகளுடைய மோசமான நாளாயுள்ளது. நான்

வீட்டிற்குச் சென்றபோது, அது அவ்வாறு இருந்தது; கழுவுவதற்கான தண்ணீர் மற்றும் காரியங்களை நான் நிறைக்க வேண்டியிருந்தது. இந்தப் பிற்பகல் வேளையில் என்னுடைய தாயார் இங்கே இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். என்னுடைய சகோதரன் சில நிமிடங்களுக்கு முன்பு இங்கே இருந்ததைக் கண்டேன். அவர்கள் (தாயார்) இங்கிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

நான் வழக்கமாக போய் மரக்கிளைகளை வெட்டிக் கொண்டு, அவைகளை உள்ளே

இழுத்து வந்து, அதை தீயில் போட்டு, பழைமையான பெரிய கொதிகலனில் உள்ள தண்ணீரை (wash water) வெளியே வைத்து கொதிக்க வைப்பதுண்டு. அது எவ்விதமாக இருந்தது! என்னே. அவர்கள் (தாயார்) வழக்கமாக பதப்படுத்தப்படும் ஆகாரங்களை (preserves) (உதாரணம்: ஜாம், ஊறுகாய், வற்றல்) சமைப்பதை நினைவுகூருகிறேன். நான் வழக்கமாக அங்கே உள்ளே செல்வேன், எனக்கு வியர்த்து வடியும், உங்களுக்குத் தெரியும், அந்தக் கோடை காலத்தில், அந்த சிறு மஞ்சள் நிற பூசணி வகை

காயும் (gourd), தக்காளியும் மிகவும் அருமையானவையாகவும் நன்றாகவும் உள்ளன, அவைகளிலிருந்து பழக்கூழ், ஊறுகாய், வற்றல் போன்றவை தயாரிக்கப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். குளிர்ச்சியான ஒரு காலை வேளையில், சூடான பிஸ்கட்டுகளுக்கிடையே அவைகளை வைக்கும்போது அவைகள் அருமையாக இருக்கும் என்று நான் உங்களிடம் சொல்லுகிறேன். அவர்கள் அதை அதில் ஊற்றுவார்கள், நான், "ஆ,

அம்மா, அந்த நெருப்பு போதுமான அளவு சூடாக உள்ளது" என்பேன்.

அவர்களோ, "ஓ, அவை இன்னும் போதுமான அளவு சூடாகவில்லை" என்பார்கள். அவைகள் அப்படியே வெந்து, ஆவியாக வந்துகொண்டிருந்தது.

நான், "அவைகள் ஏன் போதுமான அளவு சூடாகவில்லை?" என்று கேட்டேன்.

27. அவர்கள், "அவை சரியாக வேவதற்கு முன்னால், அவைகள் சத்தத்தோடு கொதிக்க வேண்டியுள்ளது: சத்தத்தோடு கொதித்தல்" என்றார்கள்.

“அவைகள் கொதிப்பதால் உண்டாகும் சத்தம் ஏற்படுவது வரை விறகை கொடுத்துக்கொண்டேயிரு” என்றார்கள். சத்தத்தோடு கொதித்து குமிழ் வருதல், காற்று மேலே வருதல், உங்களுக்குத் தெரியும்.

அது ஒரு நல்ல உவமை என்று நான் எண்ணினேன். ஒரு நல்ல பழமையான பரிசுத்த ஆவி கூட்டத்தை அது எனக்கு ஞாபகப்படுத்துகிறது. நீங்கள் கொஞ்சம் விறகை வெட்டி, அவைகள் கொதிக்கத் தொடங்குவது வரை அதைத்

தொடர்ந்து தீயில் போட்டுக் கொண்டேயிருங்கள். அதுதான் சரி. முத்திரை போடுவதற்கு ஆயத்தமாகுங்கள். நீங்கள் இரும்பை சூடாக்கி, அதைக்கொண்டு வேறு ஏதோவொன்றை செய்வதற்காக ஆயத்தமாவதற்கு முன்னால், அதைச் சூடாக்கி, அதைப் பட்டறைக் கல்லில் வைத்து, தீப்பொறி அதிலிருந்து வருவது வரை அதை அடித்து, அவளை (இரும்பை) வார்ப்பார்கள். தேவன் முதலாவது ஒரு கூட்டத்தை நடத்த ஆயத்தமாகிறார்; அவர் உங்களுடைய இருதயத்தை அவரை

நோக்கித் திருப்பும்படி செய்ய வேண்டியவராயிருக்கிறார். அதன்பிறகு தேவன் உங்களிலிருந்து ஏதோவொன்றை உண்டாக்கி, தூய்மையான கலப்படமற்ற விசுவாசத்தில் தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக உங்களை வார்ப்பிக்கப் போகிறார்.

**28.** இப்பொழுது கவனியுங்கள், மரியாள் கிழக்கத்திய மாதிரியின்படியாக தன்னுடைய தலையில் தண்ணீரை சுமந்தபடி, அந்த சுத்தமான நீரூற்றுகளிலிருந்து வீட்டிற்கு வருவதை என்னால் காண முடிகிறது, அவள் தெருவில்

போய்க் கொண்டிருக்கிறாள், எல்லாருமே – தெருவில் யாருமில்லை. அவள் அந்தச் சந்தின் வழியாகக் கடந்து போயிருக்கலாம், அவள் அங்கு தான் வசித்து வந்தாள், அதன் ஓரத்தில் ஒரு சிறு குடிசை இருந்திருக்கலாம்: அவள் மிகவும் ஏழையாகவும், விதவையாயிருந்த தன்னுடைய தாயுடனும் வாழ்ந்து வந்தாள். துணிகளைத் துவைக்கும் நாளாகிய இந்தத் திங்கள் கிழமையில், அவள் பாதையில் நடந்து கொண்டிருந்தாள், ஆனால் அவள் ஒரு கன்னிகையாயிருந்தாள்.

அந்தப்பட்டணம் எவ்வளவு அருவருப்பானதாக (பாவம் நிறைந்ததாக) இருந்தாலும் காரியமில்லை, அவள் ஒரு கன்னிகையாயிருந்தாள்; அவள் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தாள். திடீரென்று ஒரு மகத்தான வெளிச்சம் அவளுக்கு முன்பாகத் தோன்றியது. இந்த வெளிச்சத்தின் கீழாக நின்று கொண்டிருந்தது பிரதான தூதனாகிய காபிரியேலாக இருந்தது (அல்லேலூயா.) ஆமென். அது உங்களை பயப்படுத்தும்படி அனுமதிக்க வேண்டாம், “ஆமென்” என்பதற்கு, “அப்படியே

ஆகக்கடவது" என்று அர்த்தமாகும். சரி, அந்த பிரதான தூதன் அங்கே நின்று கொண்டு, "வாழ்க மரியாளே, ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். நீ தேவனுடைய பார்வையில் கிருபை பெற்றிருக்கிறாய்" என்றான்.

29. "என்ன? தேசத்திலேயே மிகவும் கீழ்தரமான பட்டணத்தை சேர்ந்தவளாகிய நானா? இங்கே இந்தச் சந்திற்குப் பின்னால் ஜீவித்துக் கொண்டிருக்கும் ஏழையான சிறு வயது பெண்ணாகிய நானா? இருப்பினும் நான் தேவனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறேனா?"

"ஆம், நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்" என்றான்.

இத்தூதனுடைய வாழ்த்துதல், அந்த சிறு கன்னிகையை திகிலடையச் செய்தது, ஒரு ஒளி அவன் மேல் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் அந்த வெளிச்சத்தில் நின்று கொண்டு, "வாழ்க" என்றான். அது உங்களை பயமடையச் செய்யும். அது யாரையுமே பயமடையச் செய்யும்.

இப்பொழுது, அவர் அவளிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, அவரை நோக்கிப்பார்க்கவும், அவரைக் கவனிக்கவும் நான் விரும்புகிறேன். அவன், "நீ

தேவனிடத்தில் மிகவும் கிருபை பெற்றிருக்கிறாய், நீ ஒரு பிள்ளையைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" என்றான்.

"ஏன்," அவள், "இந்தக் காரியங்கள் எப்படியாகும்?" என்றாள்.

"பரிசுத்த ஆவி உன்மேல் நிழலிடும். (ஆமென்.) உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்றான். இப்பொழுது, ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் அதை

விசுவாசிக்கிறீர்களா? தேவன் ஒரு ஆவியாயிருக்கிறார்.

சிறிது காலத்திற்கு முன்னால், நான் ஒரு நபரிடம் பேசிக்கொண்டிருந்தேன், அவர், "பிரசங்கியாரே, அது சத்தியமென்று நீர் உண்மையாகவே விசுவாசிப்பதில்லையா?" என்று கேட்டார்.

"ஆம், நான் விசுவாசிக்கிறேன்" என்று சொன்னேன்.

**30.** அவர், "இப்பொழுது, கவனியும், அது சற்று முட்டாள்தனமாக இருக்கிறதே, யோசேப்பு இந்த ஸ்திரீயுடன் –

அந்த பெண்ணுடன் போய்க் கொண்டிருந்தான்" என்றார். அவன் மனைவியை இழந்தவன், அவனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர், "இப்பொழுது, கவனியும், அவன் அந்த ஸ்திரீயோடு கூட போய்க் கொண்டிருந்தான். அங்கே சற்று தவறாயுள்ளது என்று நம்புகிறேன், இல்லையா?" என்றார்.

நான், "இல்லை, ஐயா. அவர் பரிசுத்தமான தேவகுமாரனாயிருந்தார், அவர் கன்னிப் பிறப்பின் மூலம் பிறந்தார் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றேன்.

"அது எங்ஙனம் இருக்கக்கூடும்?" என்று கேட்டார்.

31. அந்த மனிதனுக்கு தேவனிடத்தில் விசுவாசமில்லை என்பதைக் காண்கிறோம். மேலும் அவர், "சகோதரன் பிரன்ஹாமே, அது எல்லா விஞ்ஞான விதிகளுக்கும் மாறுபட்டுள்ளது; அது அவ்வாறு சம்பவித்திருக்க முடியாது. கவனியும், கோதுமையானது மகரந்த சேர்க்கை நடைபெறாவிட்டால் அது வளராது, சோளமும் அவ்வாறே வளராது. ஆண் பெண் இருவருமே இல்லாமல் எதுவுமே தன்னைத்தானே பிரதியுற்பத்தி

செய்ய முடியாது. ஒரு மரம் கூட நடப்பட்டு, மாறுதலடையவும் மற்ற காரியங்கள் சம்பவிக்கவும் வேண்டியுள்ளது. தேனீக்கள் ஆண் மற்றும் பெண்ணை உண்டாக்கும்பொருட்டு, ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மகரந்த சேர்க்கையைக் கொண்டுவருகிறது, அல்லது அவைகள் வளராது. அது எல்லா விஞ்ஞான விதிகளுக்கும் எதிரானது" என்றார்.

நான், "ஆனால் இது விஞ்ஞானத்தையே சிருஷ்டித்தவரான தேவனாயுள்ளது" என்றேன்.

அவர், “அது அவ்வாறு இருக்க முடியாது” என்றார்.

நான், “நான் ஒரு காரியத்தை உம்மிடம் கேட்க விரும்புகிறேன். தேவன் ஒருவர் உண்டென்று நீர் விசுவாசிப்பதில்லையா?” என்று கேட்டேன்.

அவர், “இல்லை, ஐயா. எந்த கன்னிப்பிறப்பிலும் எனக்கு விசுவாசமில்லை; எப்பொழுதுமே அப்படிப்பட்ட காரியம் இருந்ததுமில்லை, ஒருபோதும் இருக்கப்போவதுமில்லை, நான் அதை விசுவாசிப்பதில்லை. அந்த மனிதராகிய யோசேப்பு தான்

அவருடைய தகப்பனாக இருந்தார்” என்றார்.

32. நான், “நான் ஒரு காரியத்தை உம்மிடம் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் அது ஒரு மனிதனைப் பொறுத்த வரையில் முற்றிலும் கூடாத காரியம் என்றும் மகத்தான சிருஷ்டிகரான தேவனுக்கு... அது முழுவதும் கூடாத காரியம் என்றும் என்னிடம் கூற விரும்புகிறீரா?” என்றேன்.

அவர், “அங்கே அப்படிப்பட்ட ஒரு காரியம் கிடையாது” என்றார்.

நான், “கவனியும், சற்று என்னைப் பின்தொடர்ந்து வாரும். இந்தக் குழந்தையைக் கொண்டு வருவது சிருஷ்டிகரான தேவனால் கூடாத காரியம் என்று நீர் நம்புகிறீர். அவர் ஒரு பூமிக்குரிய தாயைக் கொண்டிருந்தார் என்று நீர் ஒப்புக் கொள்கிறீர், நானும் கூட அதை ஒப்புக் கொள்கிறேன். நல்லது, ஆனால் அவருக்கு பூமிக்குரிய ஒரு தகப்பன் இல்லாவிட்டால், ஒரு குழந்தையைக் கொண்டு வருவது, அவரில்லாமல் கூடாத காரியமாகும்” என்று கூறினேன்.

அவர், “அது சரியே” என்றார்.

**33.** நான், “அப்படியானால் உம்மிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், தகப்பனோ தாயோ இல்லாமல் முதலாவது மனிதன் எப்படி இங்கே வந்தான்? அவன் தலைப்பிரட்டையாகவே (தவளையாக வளர்ச்சியடையும் நீண்ட வால் கொண்ட உயிரி – மொழிபெயர்ப்பாளர்.), தவளைக் குஞ்சாகவோ, குரங்காகவோ, நீங்கள் அவனை அழைக்க விரும்புகிறபடி எதுவாகவோ இருக்கட்டும், அவன் எப்படி இங்கே வந்தான்? நீர் கூறினபடி, அவன் தகப்பன் தாய் இருவரையும் கொண்டிருக்க வேண்டுமே”

என்றேன். அது சரியே. நான், "அவனுடைய தகப்பனும் தாயும் யார்?" என்று கேட்டேன்.

இந்நாளுக்கு அவர் எனக்கு பதில் கூறவில்லை. அவரால் பதிலளிக்க முடியவில்லை. தேவன் இந்தப் பிள்ளையை உண்டாக்கினார். ஆம், ஐயா. ஆணிடமிருந்து இரத்த உயிர் அணு வருகிறது என்று நான் நம்புகிறேன். அது உண்மை. நாம் அதை அறிவோம். இங்கேயிருக்கும் ஜனங்களாகிய உங்களில் அநேகர் விவாசாயிகளாய் இருக்கிறீர்கள். உங்களுடைய பெட்டைக் கோழி கோடை காலம் முழுவதும்

முட்டையிடலாம். ஆனால் அவள் ஆணோடு (சேவல் கோழியோடு – மொழிபெயர்ப்பாளர்.) சேரவில்லையென்றால், அவைகள் ஒருபோதும் குஞ்சு பொரிக்காது. அது சரியே.

இப்பொழுது, பறவைகள் தங்களுடைய கூட்டைக் கட்டி — தாய்ப் பறவை வெளியே மரத்தில் ஒரு கூட்டைக் கட்டி, கூடு முழுவதுமாக முட்டைகளையிட்டு, அதைச் சுற்றிலும் ஆண்பறவை இல்லையென்றால், அவள் கூட்டில் உட்கார்ந்து, அந்த முட்டைகளை அடைகாத்து, அம்முட்டைகளை மீண்டும் மீண்டும் திருப்பிப்

போட்டு, அவளால் பறப்பதற்கு கூட முடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையையடைந்து, கூட்டை வெதுவெதுப்பாக வைத்துக் கொள்கிறாள். ஆனால் அவள் ஆண் பறவையுடன் சேரவில்லையென்றால், அவைகள் கூட்டிலேயே கிடந்து அழுகிப் போகும். அவைகள் பொரிக்காது. ஏனெனில் ஜீவ கிருமி ஆணிடமிருந்தே வருகிறது.

**34.** இங்கே சுற்றிலும் நீங்கள் பெற்றிருக்கிற, இந்தப் பழைய குளிர்ந்து போன சடங்காசாரமான சபைகளில் சிலவற்றை அது என் ஞாபகத்தில் கொண்டு வருகிறது:

கூடு நிறைய முட்டைகளைக் கொண்டிருக்கின்றனர், நீங்கள் அப்படியே அந்த டீக்கன்மார்களை அழைத்து, சுற்றிலுமுள்ள அவர்களிடம் கலந்து ஆலோசிக்கலாம்...?... அந்தக் கூட்டைக் கிழித்துப் போட்டு வேறு ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்ளுவது மிகவும் நல்லது. அவர்களுக்கு தெய்வீக சுகமளித்தலில் விசுவாசமில்லை; அவர்களுக்கு தேவனிடத்தில் விசுவாசமில்லை. ஜீவனுடைய தொடுதலைப் பெற அவர்கள் அந்த ஆணோடு ஒருபோதும் சேர மாட்டார்கள், அது சரியே. அதுவே

சத்தியமாயுள்ளது. அந்தக் கூட்டை வெளியே எறிந்து விட்டு, மீண்டும் தொடங்குவது நல்லது. அது சரியே. எவ்வளவு டீக்கன்மார் இருக்கிறார்கள் என்பது காரியமில்லை, நீங்கள் அவனை மெருகூட்டி, இது, அது அல்லது மற்றது என அவனை அழைத்து, அல்லது முதுகில் தட்டிக் கொடுத்து, அல்லது சபை புஸ்தகத்தில் அவனுடைய பெயரை எழுதுகிறீர்கள், அவர்கள் மறுபடியுமாக பிறக்கும் மட்டும், இன்னும் பாவத்திலும் அக்கிரமங்களிலும்

மரித்தவர்களாயிருக்கின்றனர். ஆம், ஐயா. அது உண்மை.

**35.** இப்பொழுது திரும்பவும் கவனியுங்கள், துரிதமாக. பிதாவாகிய தேவன், ஆவியானவர் அந்த சிறு கன்னிகையின் மேல் நிழலிட்டு, சகலத்தையும் சிருஷ்டித்த பிதாவாகிய தேவன் இரத்த உயிரணுவை அந்த கருப்பையில் – அந்த ஸ்திரீயினுடைய கருப்பையில் உண்டாக்கி, கிறிஸ்து இயேசுவாகிய குமாரனை கொண்டு வந்தார், அவரே பூமியில் தேவனுடைய கூடாரமாக இருந்தார். ஆமென்.

அப்படியானால் நாம் மாம்சீக உறவின் இரத்தத்தினால் (sexual blood) இரட்சிக்கப்படவில்லை, ஆனால் நாம் சிருஷ்டிக்கப்பட்ட இரத்தத்தினால் – தேவனுடைய சொந்த இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கல்வாரி சிலுவையில் சிந்தின இரத்தம் அவரே. அதன் காரணமாகத்தான் நான் இரட்சிப்பிலும் தெய்வீக சுகமளித்தலிலும் விசுவாசம் கொண்டுள்ளேன், ஏனெனில் கல்வாரி சிலுவையில் அவருடைய குமாரனுடைய இரத்த நாளங்களிலிருந்து ஊற்றப்பட்டது

தேவனுடைய சொந்த இரத்தமாக இருந்தது. ஆமென். அதன் காரணமாகத்தான் நாங்கள் எதிர்ப்புகளை எதிர் கொண்டு நின்று, "அதுதான் சரி!" என்று கூற முடிகிறது. நீங்கள் அடிப்படை சத்தியங்களுக்கு திரும்பிச் சென்று, அது என்னவென்று கண்டு கொள்வீர்களானால், நீங்கள் எங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள். நாம் தேவனுடைய இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

★★★★★

# ஒருபோதும் சம்பவித்திராத ஏதோவொன்றை அவள் விசுவாசிக்க வேண்டியிருந்தது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: கிறிஸ்துவின் ஊழியம்,
ஜுன் 7, 1953, கானர்ஸ்வில்,
இந்தியானா, அமெரிக்கா



**36.** இப்பொழுது, இந்தச் சிறு கன்னிகை முழுவதுமாக பரவசமடைந்தாள். கவனியுங்கள்,

இங்கே உள்ள காரியம் தான் நான் மரியாளைக் குறித்து விருப்பம் கொள்ளச் செய்கிறது. ஆமென். சகரியாவைப் போல, அந்தப் பிரசங்கியாரைப் போல சந்தேகப்படுவதற்குப் பதிலாக, அவள், "இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக் கடவது" என்றாள்.

அவன் செய்ததைப் போல, அவள் அதெல்லாவற்றையும் புரிந்து கொள்ளும்படி முயற்சிக்கவில்லை. அவன், "எப்படியாகும், இப்பொழுது, கவனியும், என்னுடைய மனைவி வயது சென்றவள்" என்று

கூறினான், இதைப் போன்ற மற்றவைகளைக் கூறினான். நம்மிடம் ஏராளமான திருஷ்டாந்தங்கள் உள்ளன. ஆலயத்திலிருந்த ஆகாரைக் கவனியுங்கள். மேலும் சாராளைக் கவனியுங்கள். அநேக பண்டைய கால ஸ்திரீகள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் தங்கள் மேல் வந்ததன் காரணத்தால் தான் (பிள்ளைகளைப் பெற்றனர்) பிள்ளைகளைக் கொண்டிருந்தனர். நம்மிடம் ஏராளமான திருஷ்டாந்தங்கள் உள்ளன. ஆனால் அவன் – ஒருபோதும் சம்பவித்திராத ஏதோவொன்றை

அவள் விசுவாசிக்க வேண்டியிருந்தது.

நல்லது, மரியாளைக் குறித்து நான் விரும்புவது இங்கே தான் உள்ளது. அவள் ஜீவனை உணரும் முன்பே, எந்த உடல் சார்ந்த வெளிப்படையான உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு முன்பே, அவளுடைய சரீரத்தில் ஒரு காரியம் நிற்பதற்கு முன்பே, அவள் ஜீவனையோ அல்லது எதையுமோ உணருவதற்கு முன்பே, அவள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறாள் என்பதைக் குறித்து சாட்சி கூறத் தொடங்கினாள். அல்லேலூயா. தேவனை

அவருடைய வார்த்தையில் எடுக்கும் இன்னும் அதிகமான சில மரியாள்களை தேவன் நமக்கு அருளுவாராக. தேவன் தம்முடைய தூதன் மூலமாக அவ்வாறு கூறியிருந்தார், வேறு ஒவ்வொரு காரியமும் நடந்தாலும் அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை, அவள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறாள், ஏனெனில் அவள் தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்தாள். ஆமென்.

37. இந்தப் பிற்பகல் வேளையில் இங்கே இந்தச் சபையில் நாம் அம்மாதிரியான

ஜனங்களைக் கொண்டிருந்தோமானால், இங்கே நம் மத்தியில் ஒரு வியாதிப்பட்ட நபரும் இருக்க மாட்டார்கள். தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்து களிகூரத் தொடங்குங்கள்.

அவள் சுற்றிலும் சென்று ஒவ்வொருவரிடமும், “ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறேன்” என்று கூறிக் கொண்டிருந்தாள்.

“உனக்கு குழந்தை இருக்கப் போகிறது என்று எப்படி உனக்குத் தெரியும்?”

"தேவன் அவ்வாறு கூறினார்."

ஒரு கன்னிகை... அல்லேலூயா. ஆமென். நான் அதை விரும்புகிறேன். சரி. அவள் தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்து களிகூரத் தொடங்கினாள். அவளால் பொறுமையாக அமைதியாக இருக்க முடியவில்லை; அவள் யாரோ ஒருவரிடம் சென்று அதை சொல்ல வேண்டியிருந்தது. தேவனுடன் எப்பொழுதாவது தொடர்பு கொள்ளும் ஒவ்வொருவரும் வேறு யாரிடமாவது அதைச் சொல்ல வேண்டும். ஆம், ஐயா.

அவள் தொலைதூரத்துக்குப் போனாள். எலிசபெத்தைக் குறித்து தூதன் அவளிடம் கூறினான். எலிசபெத்து அவளுடைய நெருங்கிய இனத்தாளாயிருந்தாள் (first cousin). அவள் எலிசபெத்தைக் காண போக வேண்டியிருந்தது. எனவே நாசரேத்து தெருக்களின் வழியாக யூதேயாவுக்குள் சென்று, அவளுக்கு சம்பவிக்கப் போவதைக் குறித்து எலிசபெத்திடம் கூறும்படியாக அவளைக் காண மேலே அந்த மலை தேசத்திற்குப் போனாள். எனவே எலிசபெத்து ஏற்கனவே தாயாகியிருக்கிறாள்

என்பதை அவள் அறிந்திருந்தாள்; அவளுடன் ஆறு மாதங்கள் இருந்தாள். இவ்வாறாக அவர்கள் ஒன்றாக மகிழ்ச்சியான நேரத்தைக் கொண்டிருக்கின்றனர்.

**38.** இப்பொழுது கவனியுங்கள், மரியாள் எலிசபெத்தை சந்திக்கும்படி வருவதை என்னால் காண முடிகிறது, அவளை சந்திக்கும்படி எலிசபெத்து வெளியே வருகிறாள். அவள் வருவதை இவள் கண்டாள், இவள் ஓடிச் சென்று தன்னுடைய கரங்களை அவளைச் சுற்றிலும் போட்டு, அவளைக் கட்டித் தழுவி, அவளை முத்தமிடத்

தொடங்கினாள். அதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். “ஓ, எலிசபெத்தே, நான் உன்னைக் காண்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.”

“மரியாளே, உன்னைக் காண்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.”

அந்த விதமாகத்தான் அவர்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்தினார்கள். அவர்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருந்தனர். நீங்கள் இப்பொழுது இனிமேலும் அதைக் காண மாட்டீர்கள். அதெல்லாம் ஏறெக்குறைய மறைந்து போய் விட்டது, அன்பு. சகோதரனே,

உங்களுக்குத் தெரியும், அது பயங்கரமாக இல்லையா? ஜனங்கள் இனிமேலும் ஒருவர் மற்றவருக்காக அக்கறை கொள்வதில்லை. ஏன், நாம் தேசத்தில் வெளியே இருந்த போது, நமக்கு பண்ணை நிலங்கள் இருந்தன, அப்போது அது வழக்கமாக இருந்தது, யாரோ ஒரு அண்டைவீட்டார் வியாதிப்படும் போது, ஏன், நாம் அங்கே சென்று அவர்களுடைய தானியத்தை கொய்து அல்லது – அல்லது அந்த மரத்தை வெட்டி அதை உள்ளே கொண்டு வந்து, அவர்களுக்கு ஒத்தாசையாய் இருக்கக்கூடிய எதையாவது செய்தோம்.

ஆனால் அவர்கள் இன்மேலும் அதைச் செய்ய மாட்டார்கள். உங்களுடைய அண்டை வீட்டார் மரிப்பார்களானால், அதை நீங்கள் அறியக் கூடிய ஒரே வழி என்னவெனில், நீங்கள் செய்தித்தாளை வாசிப்பதன் மூலமே. உங்களுக்கு அதைக் குறித்து எதுவும் தெரியாது. சகோதர சிநேகம் முடிந்து விட்டது. அது சத்தியமில்லையா?

**39.** நான் அன்றொரு நாள் யாரோ ஒருவருடன் ஒரு பக்கமாக பயணம் செய்து கொண்டிருந்தேன். அங்கே தெருவில் ஒரு ஸ்திரீ போய்க் கொண்டிருந்தாள், அவள்

என்னுடைய மனைவியை அறிந்து கொண்டாள். எனவே அவள், “ஹலோ” என்றாள்.

நான், “நீ அவளிடம் பேசினாயா?” என்றேன்.

அவள், “ஆம்” என்றாள்.

நான், “நீ பேசினதை நான் கேட்கவில்லையே” என்றேன்.

அவள், “நல்லது, நான் திரும்பிப் பார்த்து புன்னகை செய்தேன்” என்றாள்.

நான், “அது அதுவல்ல, அது கொஞ்சம் முட்டாள்தனமான அசட்டு சிரிப்பாக உள்ளது. நீ போய் கொண்டே, ‘ஹாய்’ என்று

சொல்லுகிறாய். நான் அதை விரும்பவில்லை” என்றேன்.

நான் இங்கே மியாமிக்கு ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தேன், சகோதரன் போஸ்வர்த், ஏதோவொரு கோமாட்டி (சீமாட்டி – பிரபு அல்லது சீமானின் மனைவி – மொழிபெயர்ப்பாளர்) (Duchess) அங்கே இருந்தாள், அவள் அங்கே கூடாரத்தின் சிறு தொங்கலுக்குப் பின்னால் இருந்தாள். சகோதரன் போஸ்வர்த், “சகோதரன் பிரன்ஹாமே, நாம் இவ்விடத்தைக் கொண்டிருக்கும்படி அனுமதியளித்த கோமாட்டி உம்முடைய கரங்களைக் குலுக்க விரும்புகிறாள்” என்றார்.

நான், “நல்லது இப்பொழுது, அவள் மற்றவர்களைக் காட்டிலும் மேலானவள் அல்லவே” என்றேன். பாருங்கள்? நான், “அவள் வெறுமனே ஒரு ஸ்திரீயாக இருக்கிறாள்” என்றேன்.

அவர், “நல்லது, அவள் – அவள் உம்மிடம் பேச முடியாதென்று நான் அவளிடம் கூறி விட்டேன், ஆனால் நாம் இதைப் போன்ற இடத்தின் வழியாகப் போவோமனால், நல்லது, அவள் உம்முடைய கரத்தைக் குலுக்கக் கூடும்” என்றார்.

நான், "நல்லது, அது உங்களைப் பொறுத்தது" என்றேன்.

**40.** இவ்வண்ணமாக, ஞாயிறு பிற்பகலில், பிரசங்க ஆராதனைக்குப் பிறகு, நான் அங்கே பின்னால் நடந்து சென்றேன், நீங்கள் ஒரு காய்ச்சலைத் தணிக்கும் மருந்துப் பெட்டியில் (aspirin box) வைக்கக்கூடிய போதுமான ஆடைகள் அவளிடம் இருந்தன. மேலும் அவள்... இங்கே அவள் வருகிறாள், ஒரு குச்சியில் ஒரு ஜோடி கண்ணாடிகள் அவளிடம் இருந்தன. அதை இவ்விதமாகப் பற்றிப் பிடித்திருந்தாள். இப்பொழுது,

நல்லதும் நலமுமான காரியம் உங்களுக்குத் தெரியும், அவளிடமிருந்து இவ்விதமாக தூரத்தில் இருக்கும் கண்ணாடிகள் வழியாக யாராலும் பார்க்க முடியாது, அதை இவ்விதமாகப் பற்றிப் பிடித்திருந்தாள்.

இங்கே அவள் இதைப் போன்று தன்னுடைய தலையை உயர்த்தினவளாய் அந்த கண்ணாடிகள் வழியாக பார்த்துக் கொண்டு, அவளுடைய கரங்கள் முழுவதுமாக வளையல்களை அணிந்து கொண்டு, பிசாசினுடைய சேணத்தின் மேல் இருக்கும் குதிரை சேண வளையம் போன்ற

காதணிகளைத் தொங்க விட்டுக் கொண்டு வருகிறாள்...?... அவளுடைய கண்களில் கண்ணாடிகளுடன் இதைப்போன்று அங்கே நடக்க ஆரம்பித்து, அவள், “நீங்கள் டாக்டர். பிரன்ஹாமா?” என்று கேட்டாள்.

நான், “இல்லை, சீமாட்டியே. நான் சகோதரன் பிரன்ஹாம்” என்றேன்.

அவள், “நல்லது, டாக்டர். பிரன்ஹாம், நான் உங்களை சந்திப்பதில் இனிமையடைகிறேன்” என்றாள்.

இதைப்போன்று பெரிய கொழுத்த கரம் அவளுக்கிருந்தது. நான் அதைப் பிடித்தேன்; நான் அவளிடம், “இங்கே இறங்கி வாருங்கள், அதற்குப்பிறகு நான் உங்களை மீண்டும் சந்திக்கும் போது உங்களை அறிந்து கொள்வேன்” என்று கூறினேன்.

**41.** அந்த எல்லாக் காரியங்களையும் அணிந்திருந்தாள். அதில் எதுவுமேயில்லை. அது முட்டாள்தனம். நிச்சயமாக, எப்படியாயினும் நீங்கள் யார்? 50 டாலர் பெறுமானமுள்ள கோட்டை அணிந்து கொண்டு, மூக்கை மேலே உயர்த்திக் கொண்டு,

சுற்றித் திரிகிறீர்கள், மழை பெய்தால், உங்களை மூழ்கடித்துக் கொன்று போடும், நீங்கள் ஏதோவொன்றாக இருப்பதாக எண்ணிக் கொள்கிறீர்கள். நீங்கள் ஆறு அடி மண் தான். உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படவில்லையென்றால், நீங்கள் இழக்கப்பட்டிருக்கிறீர்கள்! அதைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது. ஆனால் அதுதான் இன்றைய உலகமாக உள்ளது. "ஓ, நாம் யாரோ ஒருவராக இருக்கிறோம். நாம் எங்கேயோ சேர்ந்தவர்களாயிருக்கிறோம்." அப்படியிருக்க கேலி செய்து,

ஜனங்களைப் பரிசுத்த உருளையர்கள் என்று அழைக்கிறீர்கள். ஓ, என்னே.

மரியாள் ஓடிச் சென்று எலிசபெத்தைப் பற்றிக் கொண்டு, அவர்கள் ஒன்றாக தங்களுடைய கரங்களை ஒருவர் மற்றவரைச் சுற்றிலும் போட்டுக் கொள்வதை என்னால் காண முடிகிறது. மரியாள், "ஓ, எலிசபெத்தே, நான் உன்னைக் காண்பதில் மிகவும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் அடைகிறேன்" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. அவள் தாயாகியிருக்கிறாள் என்பது அவளுக்குத் தெரியும். அவள், "நீ

ஒரு தாயாகியிருக்கிறாய் என்பதை நான் கேள்விப்பட்டேன்” என்றாள். இப்பொழுது, இதை ஒரு நிமிடம் நாடகக் காட்சியில் அமைப்போம்.

**42.** எலிசபெத், “ஆம், மரியாளே, அது சரிதான், ஆனால் எனக்கு கவலையாயுள்ளது” என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

“ஏன்?”

“ஏன், அது – அது ஒரு தாயாகிய என்னிடம் ஆறு மாதங்களாக இருக்கிறது, இதுவரையிலும் அங்கே எந்த ஜீவனும் இல்லை.” இப்பொழுது,

அது இயல்பை விட முற்றிலும் குறைவாக உள்ளது: ஏறக்குறைய இரண்டு, மூன்று மாதங்கள். எனவே அது, “ஆறு மாதங்களாகியும் ஜீவனில்லை, எனக்கு அதைக் குறித்து கவலையாயுள்ளது” என்றது.

“ஏன்,” அவள், “எனக்கு கவலையில்லை. இப்பொழுது கவனி, நீ ஒரு தாயாகப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும், ஏனெனில் தூதன் அவ்வாறு என்னிடம் கூறியிருக்கிறான். ஆனால் தூதன் என்னிடமும் கூட தோன்றினான். எந்த மனிதனையும் அறியாமலேயே நான் ஒரு

குமாரனைக் கொண்டிருக்கப் போகிறேன் என்று கூறினான். நான் அவருடைய பெயரை இயேசு என்று அழைக்கப் போகிறேன்” என்றாள்.

ஒரு மனித ஜீவனின் சாவுக்குரிய உதடுகளிலிருந்து இயேசு என்ற நாமம் முதலாவதாக புறப்பட்டு போன உடனே, அந்த தாயின் கருப்பையிலிருந்த அந்த மரித்துப்போன சிறு குழந்தை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்கத் தொடங்கியது. அது சரியே.

சகோதரனே! ஒரு ஸ்திரீயின் கர்ப்பபையில் இருந்த ஒரு மரித்துப் போன குழந்தையை அது சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்கச் செய்யுமானால், அது மறுபடியும் பிறந்த ஒரு சபைக்கு என்ன செய்ய வேண்டும்? நிச்சயமாக. ஒரு சாவுக்குரிய உதடுகள் வழியாக இயேசு என்ற நாமம் முதலாவது பேசப்பட்ட போது... ஆமென். பிசாசு அலறி கூச்சலிட்டு, வெளியேறுவதையும், பாவிகள் கதறி அழுவதையும் குறித்து பேசுகிறீர்கள்... அந்த நாமம், அதை நீங்கள் தூக்கி எறிய முடியாது, அரைகுறையாக அதை கனப்படுத்த

முடியாது, அப்போதும் அதில் வல்லமை உண்டு, நீங்கள் அதை விசுவாசித்து, அதை கனப்படுத்தியாக வேண்டும். தேவன் அதை அருளுவார்.

43. இப்பொழுது, “நீ வாழ்த்தினவுடனே” என்றாள், “பாக்கியவதி...” என்றாள், பரிசுத்த ஆவியானவர் அந்த தாயாரிடம் கடந்து சென்றார். “என் ஆண்டவருடைய தாயார் வந்தது எதினால் கிடைத்தது? உன்னுடைய வாழ்த்துதல் என் காதில் விழுந்தவுடனே, வயிற்றிலுள்ள என் பிள்ளை களிப்பாய் துள்ளிற்று” என்றாள்.

புதிதான ஏதோவொன்று சத்தமிடுவதைக் குறித்து பேசுகிறீர்கள், ஊ, ஏன், சத்தமிடும் மார்க்கம் தான் உலகத்திலேயே பழைமையான மார்க்கமாகும். ஏன், உலகத்தோற்றத்திற்கு முன்பே – ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னே, தேவன் ஒரு நாள் யோபிடம் கேட்டார், அவர், "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? அப்பொழுது விடியற் காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் கெம்பீரித்தார்களே" என்றார். புதிதான ஏதோவொன்றைக்

குறித்து பேசுகிறீர்கள், பழைமையான காலத்தின் புதிதான ஒரு காரியத்தை நாம் பெற்றிருக்கிறோம். அவ்வளவுதான். நிச்சயமாக. கெம்பீரித்தல், என்னவொரு தருணம், என்னே...

**44.** இந்த யோவான் பிறந்த போது, அது எப்படிப்பட்ட ஒரு குழந்தையாக இருக்கப் போகிறது? என்னே, அவன் தன்னுடைய கழுத்துப்பட்டையை பின்னால் திருப்பாமல், தினமும் மூன்று வேளை பொரித்த கோழியைக் கொண்டிருக்காமலும், அவன் வனாந்தரத்திற்கு வெளியே வருவதை நான் காண்கிறேன்.

இல்லை, ஐயா. அவன் ஒரு பழைய ஆட்டுத்தோலை தன்னைச் சுற்றிலும் போர்த்துக் கொண்டு, ஒரு ஒட்டகத் தோலை வார்க்கச்சையாக கட்டிக் கொண்டு, அவன் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தான். சுற்றிலுமுள்ள பிரதேசம் முழுவதையும் கலக்கிக் கொண்டிருந்தான். அவன் கிறிஸ்துவைப் பிரசங்கித்தான்.

மேலும் சகோதரனே, கிறிஸ்து அதனுடைய எளிமையில், இன்னும் அதனுடைய வல்லமையில் பிரசங்கிக்கப்படும் போது, ஜீவனுள்ள தேவனாகிய கிறிஸ்து ஜனங்களிடம் யதார்த்தத்தைக்

கொண்டு வரும் போது, அது ஒவ்வொரு தடவையும் தேசங்களைக் கலக்கும். நிச்சயமாக, அது எப்போதுமே அவ்வாறு இருந்திருக்கிறது. எல்லாக் காலங்களிலும் தேவனுடைய வல்லமையானது அவருடைய ஜனங்களோடு எப்போதுமே இருந்திருக்கிறது. கடந்த இரவு இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து எண்ணிப் பார்த்தேன், அவர்கள் ஒரு இடத்துக்கு வந்தபோது – சில சமயங்களில் நாம் குழப்பமடைகிறோம் என்பதை நான் அப்போது எண்ணிப் பார்த்தேன்.

அவர்கள் காதேஸ்பர்னேயாவுக்கு வந்த போது, அவர்கள் குழப்பமடைந்தனர். தேவன் அவர்களுக்காக ஒரு வழியை உண்டாக்கினார். அவர்கள் சிவந்த சமுத்திரத்தில் இருந்த போது, தேவன் சிவந்த சமுத்திரத்தைப் பிளந்தார்.

**45.** அவர்களைக் கவனித்துப் பாருங்கள், அவர்கள் உணவு சமைக்க பயன்படும் சிறிய கொள்கலன்கள் முழுவதும் அப்பத்தை எடுத்து, தங்களுடைய தலையின் மேல் சுமந்து கொண்டு வந்ததைத் தவிர வேறொன்றுமில்லாமல் அந்த

தேசத்தை விட்டு வெளியே வந்தனர். உங்களுடைய கஞ்சத்தனமான (அற்பத்தனமான) எல்லாவற்றையும் விட்டுவடுவது வரை நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. நீங்கள் இருக்கிறவிதமாகவே வாருங்கள். நீங்கள் விரும்புகிற வழி அதுதான். “நல்லது, நான் இதிலிருந்து, இது மற்றும் அதிலிருந்து விடுபடும்போது, நான் வருவேன்” என்று கூறலாம். இப்பொழுது நீங்கள் இருக்கிறவிதமாகவே வாருங்கள்.

கவனியுங்கள், அவர்கள் மறுகரையை அடைந்த போது,

அப்பமானது தீர்ந்து போயிற்று. தேவன் எப்போதுமே ஒரு வழியை அருளுபவர். அந்த இரவில் அவர்கள் படுக்கைக்குப் போன போது, தீர்க்கதரிசி வெளியே சென்று ஜெபிப்பதை என்னால் காண முடிகிறது. அடுத்த நாள் காலையில், அவர்கள் தூக்கத்தை விட்டு எழுந்த போது, அவர்கள் சுற்றிலுமுள்ள எல்லா திசைகளிலும் தரையின் மேல் நோக்கிப் பார்த்தனர், அங்கே உறைந்த பனிக்கட்டி பொடியைப் போன்று மன்னா தரையின் மேல் எங்கும் கிடந்தது. அது தேன் மற்றும் பணிகாரத்தைப் போன்று

ருசியாயிருந்தது. அவர்கள் வெளியில் சென்று அதை எடுத்து புசிக்கத் தொடங்கினர். ஓ, அது அற்புதமாக இருந்தது, அது தான் மன்னா. அது இன்றுள்ள நம்முடைய மன்னாவிற்கு மிகவும் அழகான மாதிரியாயுள்ளது, முழு வனாந்திர பிரயாணத்திற்கும். அவர்களைக் கவனியுங்கள், அவர்களுக்குத் தேவையான மன்னாவை தேவன் அருளினார். அப்போது அவர்கள்... கன்மலையின் தேனைப் போன்று ருசியாயிருந்தது என்று அவர்கள் கூறினர். தேவனிடமிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வந்த

பரலோக மன்னாவை நீங்கள் எப்பொழுதாவது ருசித்துப் பார்த்ததுண்டா**?** நான் எப்பொழுதும் ருசித்துப் பார்த்த எந்த தேனைக் காட்டிலும் இனிப்பாக உள்ளது**.**

★★★★★


சூனேமியாள்

விசுவாசியாக இருக்கும் நபர்
எங்கேயிருந்தாலும், அது ஒருபொருட்டேயல்ல,
தேவன் தாம் தேவனாக இருப்பது எவ்வளவு
நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர்
ஏதாவது ஒருவிதத்தில் உண்மையான செய்தியை
அவர்களிடம் கொண்டுபோய் சேர்த்து விடுவார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **தீர்க்கதரிசியாகிய எலிசா**, அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

---

60. இந்நிலையில், எலிசா சூனேம் என்னப்பட்ட ஒரு சிறு இடம் வழியாகக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அந்த இடம் வேதாகமத்தில் மிகச்சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. யோசுவாவில், அவர்கள் தேசங்களைப் பங்கிட்ட போது, சூனேம் என்ற இந்தச் சிறிய இடம் எங்கேயிருந்தது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். **ஆனால் ஒவ்வொரு சிறிய இடத்திலும், தேவன் எங்கோ ஒரு சாட்சியைக் கொண்டிருக்கத் தான் போகிறார்.**

அவ்வண்ணமாக, அதற்கு இசைய அங்கே சூனேமில், ஒரு உண்மையான பெண்மணி வசிக்க நேர்ந்தது. அவள் ஒரு விசுவாசமுள்ள பெண்ணாக (loyal woman) இருந்தாள், அவள் ஒரு உண்மையான சீமாட்டி. அவளுடைய புருஷன் வயது முதிர்ந்த ஒருவனாக இருந்தான்.

61. எலிசா, அதனூடாகப் போகும்படி நேரிட்டது, அவன் மேலே கர்மேல் பர்வதத்துக்கு போய்க் கொண்டிருந்தான். அவன் மேலே போகும் பாதையில், கர்மேல் பர்வதத்துக்குப் போக வேண்டுமானால், சூனேம் வழியாகத்தான் போக வேண்டியிருந்தது. இப்பொழுது, எலிசாவுக்கு அங்கு மேலே ஒரு குகை இருந்தது. அவன் ஜெபிக்கப் போகும்

இடமாகிய ஒரு பிரத்யேகமான குகை அவனுக்கு இருந்தது. தற்செயலாக, மேலே கர்மேல் பர்வதத்தில் ஒரு குகை இருந்தது, அதுதான் அது. அவன் அமாவாசையிலும் (new moon - பொதுவாக பூமியில் இருந்து நிலவின் ஒரு பகுதியை மட்டுமே நாம் பார்க்க முடியும். எனவே நிலவு பூமிக்கும், சூரியனுக்கும் நடுவில் சுற்றி வரும் போது, நிலவில் நமக்கு தெரியாத மறு பகுதியில் மட்டுமே சூரிய ஒளி படுகிறது. அப்போது நம் கண்களுக்கு நிலவானது புலப்படாது, இதை தான் நாம் அமாவாசை என்று கூறுகின்றோம் - மொழிபெயர்ப்பாளர்.), ஓய்வு நாளிலும் ஜெபிக்கும்படியாக அங்கே மேலே போவான்.

62. நல்லது, அவன் பட்டணத்திலே மிக நன்கு விரும்பப்பட்டவன் அல்ல என்று நினைக்கிறேன், அவன் அதனூடாகக் கடந்து போகையில், அவன் புறக்கணிக்கப்படுவதை (rejected - நிராகரிக்கப்படுவதை, ஒதுக்கித்தள்ளப்படுவதை, வெளியேற்றப்படுவதை, விலக்கிவைக்கப்படுவதை, மறுக்கப்படுவதை, அங்கீகரிக்கப்படாதிருப்பதை, அப்புறப்படுத்தப்படுவதை, கைவிடப்படுவதை, ஒதுக்கப்படுவதை, தள்ளப்படுவதை, ஏற்க மறுக்கப்படுவதை, தள்ளிவிடப்படுவதை, துரத்தப்படுவதை - மொழிபெயர்ப்பாளர்) இந்தப் பெண்மணி நிச்சயமாகக் கண்டிருக்க

வேண்டும். சூனேமானது, அவன் தன்னுடைய பிரயாணத்தில் போகக்கூடிய அளவுக்கு ஏறக்குறைய மேலே அவ்வளவு தூரத்தில் இருந்தது, அங்கே இரவு முழுவதும் தங்க வேண்டியிருந்தது. எனவே அவன் அதன் பக்கமாகக் கடந்து போகையில், அவன் ஒருக்கால் தெரு (வீதிகளிலோ), அல்லது காடுகளிலோ, எங்கேயோ இருந்த வயல்வெளிகளிலோ தங்கியிருப்பான், ஒருக்கால், சிலநேரங்களில், ஆகாரமும் இல்லாமல் இருந்திருப்பான். இந்த நல்ல பெண்மணியோ, அவள் மேலே பட்டணத்திற்குள் போகையில், இந்த மனிதனை அவள் துரிதமாக அடையாளம் கண்டுகொண்டு, அவன்

ஒரு பரிசுத்தவான் என்பதை அறிந்துகொண்டாள்.

63. இப்பொழுது, அவள் ஒரு சூனேமிய ஸ்திரீயாக இருந்தாலும், தன்னுடைய இருதயத்தில், அவள் ஒரு விசுவாசியாக இருந்தாள். **விசுவாசியாக இருக்கும் நபர் எங்கேயிருந்தாலும், அது ஒருபொருட்டேயல்ல, தேவன் தாம் தேவனாக இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர் ஏதாவது ஒருவிதத்தில் உண்மையான செய்தியை அவர்களிடம் கொண்டுபோய் சேர்த்து விடுவார்.** அது சரியே. ஏதோவொரு இடத்தில் அதைக் கொண்டுபோய் சேர்க்கும்படியாக அவர் அதை நிறைவேற்றுவார்

(manage - நடத்துவார், இயக்குவார் - மொழிபெயர்ப்பாளர்).

**எங்கோவிருக்கும் யாரோ ஒருவரின் இருதயத்தில் அவர் தொடர்ச்சியான ஒரு நோவை வைத்துவிட, அவர்கள் இவர்களுக்கு கடிதம் எழுதுவார்கள், வானொலியைத் திருப்பியோ, அல்லது வேறு ஏதோ ஒரு வழியில் இவர்கள் ஒரு சாட்சியைக் கேட்பார்கள்; இவர்கள் உண்மையான செய்தியைக் கேட்பார்கள். தேவன் அவர்களுக்கு அதை அருளிவிடுவார்.**

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

# தேவனுக்கு மரியாதை செலுத்த முடிந்த ஒரே வழி யாதெனில், தேவனுடைய ஊழியக்காரனுக்கு மரியாதை செலுத்துவது தான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

64. அநேகமாக, இந்தப் பெண்மணி, ஒருக்கால், நாம் இவ்வாறு கூறுவோம், அவள் ஒருநாள், மேலேயிருந்த வீதிக்குப் போனபோது, யாரோ ஒருவர் தெரு மூலையில் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருப்பதைக் கேட்டாள். மேலும் அவன் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டாள், அது தேவனுடைய ஒரு ஊழியக்காரன் என்பதை அவள் அறிந்து கொண்டாள். எனவே, எலிசா பிரசங்கம் பண்ணுவதை முடித்த பிறகு, அவள், "அன்பான, ஐயா, நீர் வந்து, என்னுடைய கணவரை சந்திப்பீரா? நான் உடனடியாக உங்கள் எல்லாருக்கும் கொஞ்சம் மதிய உணவு ஆயத்தம் செய்கிறேன்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

65. நல்லது, அதற்கு எலிசா, "பெருமாட்டியே, உனக்கு நன்றி. நான் அதைச் செய்ய மகிழ்ச்சியாயிருப்பேன், ஏனென்றால் செய்திக்குப் பிறகு எனக்குச் சற்று பசிக்கிறது" என்றான். எனவே அவர்கள் கீழேயிருந்த அந்த வீட்டிற்குப் போனார்கள். அவள் உள்ளே போய், இந்தத் தீர்க்கதரிசியையும், ஊழியக்காரனாகிய

கேயாசியையும் தன்னுடைய புருஷனுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டு, மிகத் துரிதமாக கொஞ்சம் சுட்ட அப்பங்களையும், கொஞ்சம் அருஞ்சுவையுண்டிகளையும், கொஞ்சம் தேநீருடன் உண்ணும் இனிப்பு அப்பவகைகளையும், அதைப்போன்ற மற்றவைகளையும் ஆயத்தம் பண்ணினாள்.

66. சென்ற மாலையில், தற்செயலாக, எடுத்துக்கொள்ளும்படியாக, வீட்டில் செய்யப்படும் இனிப்பு அப்பவகை மற்றும் சில காரியங்களைக் கொண்ட ஒரு பெட்டியை எனக்கு அனுப்பின டென்மார்க் தேசத்து டேனிஷ் மொழிபேசும் ஒரு சிறிய பெண் அங்கேயிருக்கிறாள்... அவள்... இல்லை என்று எனக்குத் தெரியும். அவள் இங்கேயிருந்தால், எப்படியும் அவளால் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ள முடியாது. அநேகமாக, இடதுகை செய்வதை வலதுகை அறிந்துகொள்வது என்பது, அதை அறிந்துகொள்ள அவள் விரும்ப மாட்டாள். உங்களுடைய சிறிய அடையாள சின்னங்களுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும், உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் நன்றிகூறுகிறேன். நான் அவைகளைப் பாராட்டுகிறேன். வீட்டில் குழந்தைகளுக்காகக் கொண்டுசெல்லும்படி, இந்தச்சிறு டென்மார்க்

தேசத்துப்பெண் (Danish woman) கொஞ்சம் இனிப்புகளை (cookies) எனக்கு அனுப்பியிருந்தாள். மேலும் அவர்கள் டேனிஷ் மொழி பேசும் டென்மார்க் தேசத்தவர்கள் என்று கூறினார்கள், அவர்களால் ஆங்கில மொழியை எழுத முடியாது, எனவே அதை எழுதுவதற்கு அவர்கள் வேறு யாரோ ஒருவரைக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது, நான் அவைகளைக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கு முன்பாக, அவைகளைச் (சாப்பிடாமல்) வைத்திருப்பதற்கு, எனக்குப் பயங்கரமான நேரம் உண்டாயிருக்கிறது. நான் அப்படியே மிக மோசமான நேரம் உடையவனாயிருக்கிறேன். நான் முன்னும் பின்னும் நடப்பேன், அவைகளை நோக்கிப்பார்ப்பேன், மேலும் மறுபக்கமாகத் திரும்பி, அவைகளைப் பார்ப்பேன். ஆனால் நான் வீட்டிற்குப் போவது மட்டுமாக, அதைத் தொடர்ந்து வெற்றிகரமாக (வைத்திருக்க) முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

67. ஆனால் ஒருக்கால், இந்தப் பெண் அவைகளை ஒரு தட்டு முழுவதுமாக, மேஜையின்மேல் வைத்திருப்பாள், எலியாவுக்கு ஒரு-ஒரு உண்மையான யூபிலி உண்டாயிருந்தது. அதற்காக அவன் அந்தப் பெண்மணிக்கு நன்றி

கூறினான். மேலும் அவன் அடிக்கடி அப்பக்கமாகக் கடந்து சென்றான். எனவே இந்த நல்ல பெண்மணி... அபிப்பிராயம் அல்லது வெளிப்பாட்டைப் பெற்றிருந்தாள். வெளிப்பாட்டைப் பின்பற்றுவதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நிச்சயமாக. சபையானது தெய்வீக வெளிப்பாடுகளின்மேல் தான் கட்டப்பட்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

68. இந்த மனிதனுக்காக அவள் ஏதோவொன்றைச் செய்ய ஊக்குவிக்கப்பட்டவளாக இருக்கையில், அவள் ஒருநாள் தன்னுடைய புருஷனிடம், "அன்பே, இப்பொழுது பாரும், நாம்- நாம் நன்றாக... இருக்கிறோம். நம்மால் இதைச் செய்ய முடியும். நமக்கு சம்பூரண செழிப்பு இருக்கிறது. நமக்குப் பெரிய பண்ணைகளும் மற்றவைகளும் உள்ளன, நம்மால் இதைச் செய்ய முடியும். இப்பொழுது, நாமிருவரும் யேகோவாவில் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறோம், இவர் அவருடைய ஊழியக்காரர். இப்பொழுது, நாம் அவருக்கு ஏதோ அருமையான ஒன்றைச் செய்வோம், அவருக்காக அதைச் செய்யும்போது, நாம் அதை யேகோவாவுக்காகவே செய்து கொண்டிருக்கிறோம். அவை எல்லாவற்றிற்கும்

பிறகு, உமக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது, நானும் நடுத்தர வயதுள்ளவள்; எனவே இவை எல்லாம் ஏதோவொரு இடத்தில் விழுந்து போவதற்கு நீண்ட காலம் ஆகாது; நாம் போவதற்கு, நமக்கு எந்தப் பிள்ளைகளோ அல்லது எதுவுமில்லை. எனவே யேகோவாவுடைய தீர்க்கதரிசியை உபசரிப்பதன் மூலமாக, நாம் யேகோவாவுக்காக ஏதாகிலும் செய்வோம்; அவர் ஒரு பரிசுத்தவான் என்றும் அவர் இந்த வழியாகக் கடந்து போகிறார் என்று நான் காண்கிறேன்" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

69. தேவன் அவனுக்குள்ளிருந்து கிரியை செய்து கொண்டிருப்பதை அவள் கண்டதின் நிமித்தமாக, அவள் அவனை, "தேவனுடைய மனுஷன்" என்று அழைத்தாள். தேவன் இந்தத் தீர்க்கதரிசிக்குள் இருந்தார் என்பதை அவள் அறிந்திருந்தாள், **அவள் தேவனுக்கு மரியாதை செலுத்த விரும்பினாள்**. **தேவனுக்கு மரியாதை செலுத்த முடிந்த ஒரே வழி யாதெனில், தேவனுடைய ஊழியக்காரனுக்கு மரியாதை செலுத்துவது தான்**. இப்பொழுது, நண்பர்களே, நீங்கள் தேவனுடைய ஒழுங்கை மதித்து நடக்கும்போது, அந்தவிதமாகத்தான் நீங்கள் அதைச் செய்கிறீர்கள். அது உண்மை.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★



# அன்னாள்

# அவள் சுயநலமில்லாதவளாய் இருந்த காரணத்தால் அவளுக்கு ஒரு தீர்க்கதரிசி அளிக்கப்பட்டான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதறல்

Jeffersonville, Indiana, USA
63-09-01E

71. அன்னாள் என்னும் மலடியைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ளது, அவளுக்கு ஒரு மகன் வேண்டுமென்று விரும்பினாள்.



ஆலயத்தின் ஆசாரியனும் கூட அவள் குடித்து வெறித்திருக்கிறாள் என்று கருதும்

அளவிற்கு அவள் உபவாசித்து ஜெபம் செய் தாள். அவள் அத்தகைய பதறல் கொண்டாள்.



மற்றுள்ள பெண்கள் அந்தப் பெண் என்ன தொப்பி அணிந்திருக்கிறாள் என்றும் வேறொருத்தி என்ன உடையுடுத்திருக்கிறாள் என்றும் கவனித்து (அது என்னவென்று உங்களுக்குத் தெரியும்). பண்ணையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அளவளாவிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அன்னாள் அப்படியில்லை. அவள் கூட்டத்தின் வழியாக கடந்துவந்து, நேராக பீடத்திற்குச் சென்றாள். அவள் அத்தனை நாட்களாக உபவாசித்துக் கொண்டிருந்தாள். அவள் பேரிலுள்ள நிந்தை நீங்க வேண்டுமென்று அவள் விரும்பினாள்.



இன்றைக்கு காரியம் எவ்வளவு வித்தியாச மாயுள்ளது! இக்காலத்தில் குழந்தை பெறுவது என்பது நிந்தையாகக் கருதப்படுகின்றது.

ஆனால் அக்காலத்திலோ குழந்தை இல்லாதது நிந்தையாகும்.



அவள் முழங்காற்படியிட்டு, ஜெபம் செய்தாள். அவள் ஆலயத்தின் மதிப்பையோ அல்லது ஆசாரியனின் மதிப்பையோ கவனிக்கவில்லை. அவள் அதிக துயரப்பட்டு, கண்ணீர் அவள் கன்னங்களின் வழியாய் வழிந்தோடியது.

அவள் பதறல் கொண்டு, “தேவனாகிய கர்த்தாவே, எனக்கு ஒரு மகனைத் தாரும்,

எனக்கு ஒரு மகனைத் தாரும்" என்று அழுது கொண்டிருந்தாள்.



72. கவனியுங்கள், அவள் சுயநலம் கொண்டவளல்ல, **கர்த்தர் அவள் விண்ணப்பத்தைக் கேட்டு, பதிலளித்து, ஒரு குமாரனைத் தந்தபோது, அவள் அவனை தேவனுக்கே திரும்பக் கொடுத்துவிட்டாள்.**





அவளுடைய ஜெபத்தை தேவன் கேட்ட பின்பு, அவள் சுயநலம் கொள்ள விரும்பவில்லை.

எனவே, அவர் அவளுக்கு ஒரு தீர்க்கதரிசியைக் கொடுத்தார்.

அது அவளுக்கு அளிக்கப்பட்ட கூடுதல் ஆசீர்வாதம்.



ஓ, அவர் இத்தகைய கூடுதல் ஆசீர்வாதங்களை நிறையத் தருகிறார்.

ஒரு குமாரனை மாத்திரமல்ல, ஒரு தீர்க்கதரிசியையும் அவர் அளித்தார்.

1 சாமுவேல் 1



இஸ்ரவேலிலே அநேக ஆண்டுகளாக பிரத்தியட்சமான தரிசனம் இல்லாமலிருந்தது. **அநேக ஆண்டுகள் கழித்து, சாமுவேல் முதல் தீர்க்கதரிசியாக தோன்றினான். இதற்குக் காரணம், ஒரு தாயார் பதறல் கொண்டு, குழந்தைக்காக வேண்டினாள்.**

குழந்தை பெறக்கூடிய பருவத்தை அவள் கடந்துவிட்டிருந்தாள். ஒருக்கால் அவளுக்கு அப்பொழுது எழுபது வயது இருந்திருக்கலாம், அவள் பதறிப்போய் ஜெபம் செய்தாள். அவளுக்கு அந்த குழந்தை எப்படியாயினும்

வேண்டியதாயிருந்தது. அது என்ன? **கர்த்தர் அவளுடன் பேசினார் என்பதில் சந்தேக மில்லை.**



**கர்த்தர் உங்களுடன் பேசும் வரைக்கும் நீங்கள் பதறல் கொள்ள முடியாது.**













ஓ, சபையே, எழும்பி உன்னை அசைத்துக் கொள்! உன் மனசாட்சி உன்னை குத்தட்டும். இந்த மணி நேரத்தில் உறக்கத்தினின்று எழு! நாம் பதறல் கொள்ள வேண்டும். இல்லையேல் அழிந்து போக வேண்டும்! ஏதோ ஒன்று தேவனிடத்திலிருந்து வந்து கொண்டிருக் கிறது. அது "கர்த்தர் உரைக்கிறதாவது" என்றறிவேன். ஏதோ ஒன்று வந்து கொண் டிருக்கிறது. நாம் பதறல் கொள்வது நல்லது. அது மரணத்திற்கும் ஜீவனுக்கு

**மிடையே உள்ள ஒன்று. அது நம் மத்தியில் கடந்து செல்லும், நாம் அதை காண மாட்டோம்.**



**அவள் சுயநலமில்லாதவளாய் இருந்த காரணத்தால் அவளுக்கு ஒரு தீர்க்கதரிசி அளிக்கப்பட்டான்.**

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.*

(Moody Publishers / FreeBibleimages.org) *நன்றி.*


யேசபேல்

கவனியுங்கள். வேதாகமத்தில், ஒரு மனிதனைச் சந்திக்க தன் முகத்திற்கு வர்ணம் பூசினதாக ஒரேயொரு பெண் தான் குறிப்பிடப்படுகிறாள், அவள் யேசபேல் ஆவாள். தேவன் அவளை நாய்களுக்கு இரையாக்கினார்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: **உன் கையிலிருக்கிறது என்ன?**, ஜுன் 11, 1955, மாகோன், ஜார்ஜியா, அமெரிக்கா

---

141. இப்பொழுது நடந்துக்கொண்டிருக்கின்ற எழுப்புதலைப் போலவே – நீங்கள் அதை ஆரம்பித்து, தேவனுடைய மகிமையானது விழ ஆரம்பிக்கும் போது, அப்பொழுது யாரோ ஒரு போலியாள் அங்கே வந்து சரியாக இல்லாது இருக்கின்ற ஒன்றைச் செய்து, காரியத்திலிருந்து மகிமையை எடுத்துப் போடுவான்.

இங்கே சிறிது காலத்திற்கு முன்னர் நம்முடைய கிறிஸ்தவ சகோதரிகளில் ஒருவருடன் நான் சென்றேன், அவள் யேசபேலைப் போல முகத்திற்கு வர்ணம் தீட்டிக் கொண்டிருந்தாள். நான், "உங்களுக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டேன்.

142. அதற்கு அவள், “ஆம், தேவனுக்கு மகிமை. இது பெண்களின் விடுதலையைக் குறிக்கும் ஒன்றாகும் என்று என் மேய்ப்பர் என்னிடம் கூறினார்” என்று கூறினாள். பெண்களின் விடுதலையா? உங்களுக்கு என்ன ஆயிற்று? அதுவல்ல காரியம். அப்படிப்பட்டது இல்லவே இல்லை. கிறிஸ்து உங்களை பாவத்திலிருந்து விடுவித்தாரே; ஆகவே அதைப்போன்று நடந்துக் கொள்ளுங்கள், அதைப் போன்று உடுத்திக் கொள்ளுங்கள்.

சபையானது கட்டி எழுப்பப்பட்டு சிறந்த ஒரு துவக்கத்தைப் பெறும் போது, அப்பொழுது அந்த விதமான ஒன்றானது நடந்து தான் ஆக வேண்டும். ஆம், ஐயா.

143. அதற்கு அவள், “சரி, நான் உங்களுக்குக் கூறுகிறேன். என் மேய்ப்பர் என்னிடம் நீ இவை எல்லாவற்றையும் செய்யலாம் என்று கூறினார்...” என்று கூறினாள். ஒரு வீட்டின் முற்றத்திற்கு வர்ணம் தீட்டுகின்றதற்குப் போதுமான அளவிற்கு அவள் முகத்தில் தீட்டியிருந்தாள். அவளுடைய

– அவளுடைய நகங்களானது பச்சை மாட்டிறைச்சி எலும்பைச் சாப்பிட்டது போலக் காணப்பட்டது, அவளுடைய நகங்களைச் சுற்றிலும் இரத்த நிறத்தில் இரத்தம் போலக் காணப்பட்டது. நான் “பெண்ணே நீ எனக்கு ஒரு கிறிஸ்தவளைப் போலக் காணப்படவில்லையே“ என்று நினைத்தேன்.

144. கவனியுங்கள், பெண்ணே, அந்த விதமான அர்த்தமற்றவைகளை உங்கள் தொண்டைக்குள்ளாக ஊற்றப்பட அனுமதிக்காதே. ஒரு அருமையான பழமை பாணியிலான பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது உங்களை அதினின்று சரியாக அப்படியே வெளியே எடுத்து ... ?..... அது சரி. நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் எங்கோ ஓரிடத்தில் வழி தவற விட்டுள்ளீர்கள். அந்தப் பெண் பிரசங்கி கூறினதைக் குறித்து எனக்கு அக்கறையில்லை... கூறப்போனால் முதலாவதாக அப்படிப்பட்டவைகளை உனக்குக் கூறுவதற்கு அவள் தேவனால் நியமிக்கப்படவில்லை. அது சரி. அது வார்த்தைக்கு முரணான ஒன்றாகும்.



145. கவனியுங்கள். வேதாகமத்தில், ஒரு மனிதனைச் சந்திக்க தன் முகத்திற்கு வர்ணம் பூசினதாக ஒரேயொரு பெண் தான் குறிப்பிடப்படுகிறாள், அவள் யேசபேல் ஆவாள். தேவன் அவளை நாய்களுக்கு இரையாக்கினார்.



146. ஆதலால், முழுவதுமாக வர்ணம் தீட்டியுள்ள ஒரு பெண்ணைக் காண்பீர்களானால், நீங்கள் அவளை “செல்வி நாய் ஆகாரக்கறியே, (Miss. Dog meat) எப்படி இருக்கிறீர்கள்” என்று கூறலாம்.



அந்த விதமாக தேவன் யேசபேலுக்குச் செய்தார். அவளை ஒரு நாய் தின்னும் மாம்சமாக ஆக்கினார். அதற்கு எந்த ஒரு கவனத்தையும் செலுத்த வேண்டாம்; அது பிசாசினால் உண்டானதாகும். சரி.



ஓ, யாக்கோபு தன்னுடைய மனைவியினிடமும், மகளிடமும் கூறினது போல அவள் முதலாவதாக தன்னைச் சுத்தம் பண்ணி அதைப் போல செயல்பட வேண்டியவளாக இருக்கின்றாள். நீங்கள்

எவ்வாறு இருக்கவேண்டுமோ அந்த விதத்திலே உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள். ஆமென்.

147. இன்றிரவு நமக்குத் தேவைப்படுவது என்னவென்றால் ஒரு அருமையான பழமை பாணியிலான பரிசுத்த ஆவியின் எழுப்புதல் மற்றும் சபையின் உள்ளும் வெளியிலும் அசைந்துக் கொண்டிருக்கின்ற தேவனுடைய வல்லமைக்குத் திரும்பக் கொண்டு வருகின்ற பிரசங்கம் மற்றும் விறைப்பான குளிர்ந்த நிலைகள் தகர்க்கப்படுதலேயாகும். அல்லேலூயா. ஆம், ஐயா, அது தான் நமக்குத் தேவைப்படுகின்றது. ஆம் ஐயா, அது சரி.

★★★★★

நாய்கள் மனித இரத்தத்தை தொடாது. எனவே யேசபேலின் மாம்சத்தை தின்னும்படி தேவனே நாய்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **வர்ணம் தீட்டப்பட்ட முகத்தையுடைய யேசபேல்,**

**56-1005, பத்தி எண் 47-49**

47. ஒருநாள் தேவனுடைய வார்த்தை நிறைவேறுவதற்கான கடைசி நேரம் வந்த போது, எலியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கான நேரம் வந்த போது, அவர்கள் சமாரியாவின் குளத்திலே இரதத்தைக் கழுவும் முன்பாக சரியாக அதே இடத்தில் நாய்கள் ஆகாபுடைய இரத்தத்தை நக்கினது. அவன் அம்பு எய்யப்பட்டு கொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் இரதத்தைக் கழுவ போன போது, நாய்கள் அவனுடைய இரத்தத்தை நக்கினது.

யோசபாத்தின் குமாரனாகிய யெகூ, அவன் தனக்குப் பின்பாக சரியான தகப்பனைக் கொண்டிருந்த நீதிமானாக அவன் இருந்த போது, அதுதான் ஒரு சரியான மனிதனை, ஒரு உண்மையான இராஜாவை உருவாக்கினது.

யோசபாத் ஒரு தேவ மனுஷனாய் இருந்தான். அவன் எப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்றான் என்று பாருங்கள்? புரிகிறதா?

யெகூ இந்த இரதத்தின் மேலிருந்து கொண்டு கடுங்கோபமாக அங்கே அதனூடாக சவாரி செய்து வந்த போது, அவன் பாவம் என்று அழைக்கப்பட்ட யாவற்றையும் துடைத்து நீக்கிப் போட்டான். அவன் வீட்டை சுத்தப்படுத்தினான் என்று கருதுகிறேன்.

**சமுதாயத்தில் குறிப்பிட்ட தகுதியுடைய ஜனக்கூட்டத்தினூடாக கடுங்கோபமாக சவாரி செய்து வந்து, அந்தக் காரியத்தைச்**

**சிதறடித்து, கறுப்பை கறுப்பென்றும், வெள்ளையை வெள்ளை என்றும் அழைக்கிற இன்னுங் கூடுதலான சில யெகூக்கள் இன்றும் நமக்கு தேவை (அது உண்மை.). அது சரியே.** சரியை சரியென்றும், தவறை தவறென்றும்...



அவன் அங்கே அதனூடாக வந்த போது, சிறிய செல்வி யேசபேல் (Miss Jezebel), “நல்லது, நான் எப்படியும் பழி பாவத்துக்கு பயப்படாத ஒரு மோசமான பெண் (வில்லி) தான் என்று உங்களுக்குத் தெரியும். நான் முற்றிலும் அழகானவள்” என்று எண்ணினாள்.



அவள் அங்கே சென்று அவளுடைய மேக்அப் சாதனங்கள் வைத்திருந்த பெட்டியை எடுத்து, மேக்அப் மற்றும் காரியங்கள் எல்லாவற்றைக் கொண்டும் அவளுடைய முகத்தில் முழுவதுமாக

மேக்அப் போட தொடங்கினாள், உங்களுக்குத் தெரியும்.



ஸ்திரீகள் ஒரு உணவகத்தில் அதைச் செய்வதை நான் கண்டேன், அதன்பிறகு

ஒரு துண்டு காகிதத்தை, உணவிற்குப் பிறகு வாய் துடைக்க உதவும் சிறு துணியை எடுத்து, அதை இவ்விதமாக கடித்தனர். ஒரு குச்சியையோ அல்லது ஏதோவொன்றையோ, அவ்விதமானதைக் கடித்து, மீண்டும் திரும்பிப் பார்த்து, அதை அவ்விதமாக சுற்றி வர முயற்சிக்கும் ஒரு வெறி நாயை அது எனக்கு நினைவூட்டுகிறது.

அதன்பிறகு அவள் முழுவதுமாக தன்னைத்தானே மேக்அப் செய்து கொண்டு, அவளுடைய தலை மயிரை முழுவதுமாக அழகுபடுத்திக் கொண்டாள், அது எப்படி இருக்க வேண்டுமென்று நினைத்தாளோ அவ்விதமாக அதை அழகுபடுத்தினாள், உங்களுக்குத் தெரியும். அவள் முற்றிலும் அழகுள்ளவளாக காணப்படுவதாக எண்ணிக் கொண்டாள். அவள் அந்த புது வகையான வஸ்திரத்தை அணிந்து கொண்டு, அகந்தையோடு

நெஞ்சை நிமிர்த்தியவாறு நடந்து வந்து, ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்து, "நீ எப்போதாவது...?...?" என்று கூறினாள்.

49. யெகூ ஒரு தேவனுடைய மனுஷனாய் இருந்தான்; அது அவனோடு போகவில்லை. அவன் நல்ல வகையான ஒரு மேய்ப்பனாக இருந்தான். அவன் ஒரு உண்மையான சுவிசேஷகனா



ய் இருந்தான். அவன், "என் பட்சத்திலும் தேவனுடைய பட்சத்திலும் இருக்கிறவர்கள் யார்?" என்று கேட்டான்.



அவளுடைய இரண்டு பிரதானிகள் அவைகளைக் குறித்து போதுமான வெறுப்பு கொண்டிருந்தார்கள், அவர்கள், "நாங்கள் இருக்கிறோம்" என்றார்கள்.

அவன், "அவளை ஜன்னலை விட்டு வெளியே தூக்கி எறியுங்கள்" என்றான். ஆமென்.

அவன் மூர்க்கத்தனமாக இருந்தான் என்று கூறுகிறேன், இல்லையா?



அவளைத் தெருவில் எறிந்த போது, இரத்தம் குதிரைகளின் மேலும், இரதத்தின் மேலும் தெறித்தது. “அவள் அங்கேயே கிடக்கட்டும்” என்று கூறி விட்டு, அவள் மேலாக ஓட்டிச் சென்றான். அவன் அறியவேயில்லை... விரும்ப கூட. அவன் அப்பொழுதும் தேவனுடைய சித்தத்தில் தான் இருந்தான். **தேவனுடைய வார்த்தையானது எப்போதுமே தேவனுடைய சித்தத்தோடு கிரியை செய்யும்.**

அவன் சென்று, உட்கார்ந்து, அவனுடைய போஜனத்தைப் புசித்து விட்டு, “நல்லது, அது இன்று நன்றாக துடைத்து நீக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு விட்டது. நீங்கள் போய் அவளை அடக்கம் செய்ய வேண்டும், ஏனென்றால் அவள் ஒரு இராஜ குமாரத்தி” என்றான்.

**அவள் அங்கே விழுந்த போது, தேவனுடைய வார்த்தை நிச்சயமாக நிறைவேறினது என்பதை அவன் மறந்து போனான்.**

என்ன மீதியாக விடப்பட்டிருந்தது? அவளுடைய உள்ளங்கைகளும், அவளுடைய தலையோட்டுமே மீதியாக இருந்தன. நாய்கள் அவளைத் தின்று விட்டிருந்தன.



நீங்கள் மாத்திரம் அது என்னவென்று அறிந்தால். அது ஒரு விநோதமான காரியமாக இருந்திருக்க வேண்டும்,

**ஏனென்றால் நாய்கள் மனித இரத்தத்தைத் தொடாது. அது உண்மை.**



**அந்த நாய்கள் அதைச் செய்ய வேண்டும் என்று தேவனே அவைகளைத் தூண்டினார். அது உண்மை.**

**நான் அதை அறிவேன். அது உண்மை என்று எனக்குத் தெரியும்.**



ஆம், ஐயா, அவைகள் மனித இரத்தத்தைத் தொடாது. எனவே அப்போது இந்த நாய்கள் அவளைத் தின்று விட்டிருந்தன, ஏனென்றால் அதைச் செய்யும்படி தேவன் அவைகளுக்கு கட்டளையிட்டிருந்தார். அவள் அங்கே அந்தவிதமான அவமானத்தில் இருந்தாள்.

★★★★★





# மிரியாம்

அவர், “நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும். இல்லையேல் ஏதாவதொன்று சம்பவிக்கும்” என்றார்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: மரியாதைகள்

## Jeffersonville, Indiana, USA
## 61-10-15E

எண்ணாகமம் 12:1 எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும், ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி:

எண்ணாகமம் 12:2 கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்.

எண்ணாகமம் 12:3 மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும்

மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.

எண்ணாகமம் 12:4 சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக்கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள் என்றார்; மூன்றுபேரும் போனார்கள்.

எண்ணாகமம் 12:5 கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார், அவர்கள் இருவரும் போனார்கள்.

எண்ணாகமம் 12:6 அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி,

சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்.

எண்ணாகமம் 12:7 என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.

எண்ணாகமம் 12:8 நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்.

எண்ணாகமம் 12:9 கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.

எண்ணாகமம் 12:10 மேகம் கூடாரத்தைவிட்டு நீங்கிப்போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற

குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.

---

ஆனால் வேறொன்றை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். தேவன் ஒரு செய்தியாளனை அனுப்பி, அவன் தேவனால் அனுப்பப்பட்ட செய்தியாளன் என்பதை அடையாளங்களினால் உறுதிபடுத்தியிருந்தால், அந்த செய்தியாளனுக்குக் கீழ்ப்படிதல் என்பது அவர்களைப் பொறுத்தது. முற்றிலும் உண்மை. அவர்கள் செய்தியாளனுக்கு கீழ்ப்படிந்து அவனுக்கு மரியாதை செலுத்த

வேண்டியது அவசியம். யோசுவாவையும் காலேபையும் பாருங்கள். அவர்கள் மோசேயின் சார்பிலேயே இருந்தனர். ஆம்,ஐயா. மோசே எதிலெல்லாம் ஈடுபட்டானோ, அவர்களும் அதில் ஈடுபட்டனர். மோசே செய்தது சரியோ தவறோ, என்னவாயினும் அவர்கள் அவனுடன் கூட இருந்தனர். ஏனெனில் அவன் தேவனுடைய செய்தியாளன் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

40. ஒருநாள் தீர்க்கதரிசினியாகிய மிரியாமும், பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் கூட, மோசேயின் மனைவி எத்தியோப்பிய

ஸ்திரீயாதலால், அவளை கேலி செய்து, ”விவாகம் செய்து கொள்ள நமது கூட்டத்தில் பெண்கள் இல்லையா என்ன? அதற்கு பதிலாக, அவன் இந்த பெண்ணை விவாகம் செய்து கொண்டானே’ என்று எண்ணினதாக நாம் பார்க்கிறோம். அது மோசே தெரிந்துகொண்ட பெண் அல்ல. தேவன் மோசேக்காக அவளை தெரிந்தெடுத்தார். அவர்கள் அதைக் குறித்து கேலி செய்தபோது, அது தேவனுக்கு கோபமூட்டின் காரணத்தால் அவர் தீர்க்கதரிசினியாகிய மரியாமை அடித்து அவளுக்கு குஷ்டரோகம் உண்டாகச் செய்தார். அவள் என்ன

செய்தாள்? அவள் தேவனுடைய செய்தியாளனை கேலி செய்து, அந்தகாலத்து உடன்படிக்கையின் தூதனிடம் அவபக்தியாய் நடந்து கொண்டாள். மோசேயின் வாயாக இருந்த பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் கூட அவளுடன் சேர்ந்து கொண்டான்.

அவனுடைய சகோதரிக்கு குஷ்டரோகம் பிடித்ததை ஆரோன் கண்டபோது, அவன் மோசேயிடம் சென்று, 'உன் சொந்த சகோதரி மரிக்க நீ அனுமதிப்பாயா?" என்று கேட்டான்.

மோசே கூடாரத்துக்குள் சென்று, தேவனுடைய சமுகத்தில்

முகங்குப்புற விழுந்து, அழுது, தேவனை நோக்கி கூப்பிட்டு, அவனுடைய சகோதரிக்கு இரக்கம் காண்பிக்கும்படி கெஞ்சினான்.



அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி வந்து, ஆரோனும் மிரியாமும் என் சமுகத்தில் நிற்கும்படி அவர்களை

அழைத்து வா” என்றார் (எண். 12:4). ஓ, என்னே!

தேவன் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார். தேவன் தமது செய்தியை அனுப்பும் போது, நீங்கள் அதற்கு செவிகொடுத்து, பயபக்தியாய் நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் உருளும் பரிசுத்தர் என்றோ, அல்லது வேறெந்த பெயரினால் அழைத்தாலும் கவலைப்படாதீர்கள். உலகம் தான். விரும்பினதை செய்யட்டும். ஆனால் நீங்களோ மரியாதை செலுத்துங்கள்!

41. மிரியாம் அங்கு நின்றாள். கர்த்தர், மிரியாமையும்

மோசேயையும் இல்லை, ஆரோனையும் – உன் சகோதரனையும் சகோதரியையும் – என் சமுகத்தில் நிற்கும்படி அவர்களை அழைத்து வா" என்றார்.

அவர்கள் தேவனுடைய சமுகத்துக்கு வந்த போது கர்த்தர், 'உங்களுக்கு தேவனிடம் பயமில்லாமல் போனதென்ன?' என்று கேட்டார். பிரதான ஆசாரியனாகிய ஆரோனையும் தீர்க்கதரிசினியாகிய மரியாமையும் பார்த்து அப்படி கேட்டார். "உங்களுக்குள்ளே ஒருவன் ஆவிக்குரியவன் அல்லது தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய

நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்" என்றார். (எண். 12:6) அவன் ஆவிக்குரியவனாகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ இருந்தால். அவர், 'என் தாசனாகிய மோசேயிடம் நான் காதில் வாய்வைத்து பேசுகிறேன். நீங்கள் தேவனுக்கு பயப்படாமல் போனதென்ன?" என்றார். வேறுவிதமாக கூறினால், நீங்கள் மோசேயைக் குறித்து பேசுவது, என்னைக்குறித்து பேசுவதற்கு சமானம். நீங்கள் மோசேக்கு மரியாதை செலுத்தாவிட்டால், எனக்கும் மரியாதை

செலுத்துவதில்லை, மோசே என் தாசன் என்று உங்கள் மத்தியில் நான் நிரூபிக்கவில்லையா? உங்களுக்கோ அவன் மீது பயபக்தியே இல்லை ” என்றார்.

அது இக்காலத்து ஜனங்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்; மரியாதை இல்லை, கனப்படுத்துவதில்லை.

அவர், ”நீ அவ்வாறு செய்ததால், குஷ்டரோகியானாய். அதனால் தான் இவை யாவும் சம்பவித்தது. மோசே என் தாசன் என்பதை நீ அறிந்திருக்கவேண்டும். அது உனக்குத் தெரியும். அவனுக்கு விரோதமாக நீ எதை கூறினாலும், அதை எனக்கு

விரோதமாக கூறுபவளாயிருப்பாய்" என்றார்.



42. அவளுடைய உயிரைக் காப்பாற்றும்படி மோசே முறையிட்டான். தேவன் அவளுடைய உயிரைக் காப்பாற்றினார். அதற்கு பின்பு அவள் நீண்டகாலம் உயிரோடிருக்கவில்லை. அவள்

மரித்துபோனாள். ஆனால் அவளுடைய குஷ்டரோகம் நீங்கினது. அவள் ஏழு நாட்கள் பாளயத்துக்குப் புறம்பே தங்கியிருந்தாள் தன்னை சுத்திகரித்துக்கொள்ள. தேவன் அவளை சுகப்படுத்தினார்.



அவர் அவர்களுக்கு அறிவுறுத்த முயன்றது என்ன வெனில், ”நான் என்ன செய்கிறேனோ, அதற்கு நீங்கள் மரியாதை செலுத்த வேண்டும்.”

அந்த காலத்தில் அது தேவனுடைய மனப்பான்மையாய் இருந்ததென்றால், தேவன் மாறாதவராயிருப்பதால், அவர் இந்நாட்களில் செய்து கொண்டு வருவதற்கும் நாம் மரியாதை செலுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர் அதை அதிகாரத்துடன் கேட்கிறார். அவர், “நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும். இல்லையேல்

ஏதாவதொன்று சம்பவிக்கும்” என்றார்.

★★★★★

# நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது

~~~~~~~~~~~~~

ஆனால் நான் இதை வாலிப பிள்ளைகளிடம் கூறியாக வேண்டும். ஆபிரகாம் லிங்கன் தாம் 21 வயதைக் கடப்பது வரையில் தம்முடைய ஜீவியத்திலேயே வேதாகமத்தையும், ஃபாக்ஸ் எழுதிய இரத்தசாட்சிகளின் புத்தகத்தையும் தவிர வேறு எந்த புத்தகத்தையும் ஒருபோதும் சொந்தமாகக் வைத்திருக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பாருங்கள்? நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது **(molds)**!

*செய்தி: தாய்மார்களின் தினம்*

~~~~~~~~~~~~~

But I might pass this on to the young people. Do you know Abraham Lincoln never owned a book in his life, until he was after twenty-one years old but the Bible and the Foxe "Book Of The Martyrs." See? what you read molds the character that you are.

MOTHER'S.DAY_ JEFF.IN V-25 N-1 SUNDAY_ 59-0510M




## இயேசுவே வாசல்

பாருங்கள், அவர் ஆட்டுத்தொழுவத்திற்கு வாசலாக இருக்கிறார். பாருங்கள்? மேய்ப்பர் அனுமதித்தாலொழிய, ஆட்டு மந்தையிடத்தில் எதுவும் வரமுடியாது. நாம் வாசலில் நிற்கும் அந்த மேய்ப்பரைப் பெற்றிருப்போமானால், அது நமக்கு எவ்வளவு பாதுகாப்பாகவும் எவ்வளவு மகிழ்ச்சியாகவும் இருக்கும். மேய்ப்பர் அனுமதித்தாலொழிய, சாத்தான் உன்னைத் தொடமுடியாது. அது என்னவாக இருந்த போதிலும் சகலமும் நன்மைக்கேதுவானதே.

Rev. William Branham

56-01-29 இயற்கைக்கு மேம்பட்டவைகள்

உங்களுக்குத் தெரியுமா? "கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று கூறுவதைக் காட்டிலும், மற்றவர் என்னிடமிருந்து எதிர்பார்க்கும் மற்றொரு பெரிய செயல் இல்லவே இல்லை யெனலாம். அவர் அவ்விதம் செய்வாரானால், அதுவே எனக்கு அவசியமாயுள்ளது - அது மாத்திரமே. "கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்" என்பதே மொழியில் காணப்படும் மிகப் பெரிய சொற்களாம். அவர் ஆசீர்வதிக்கிறார் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

**64-07-19E பாளயத்துக்கு புறம்பே செல்லுதல், பத்தி எண் 6**

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


**சகோ. பினேகாஸ்**
**போன்: 8838623242, 9551855108**
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in